அசல்

15.7.30. செ. சீனித்தம்பி

அசல் – 1   நகல் – 1

உ

சிவமயம்.

மருதமுனை.
15.7.30.

மஹாமஹோபாத்தியாயர்
பிரம்மஸ்ரீ உ. வே. சாமிநாதையர் அவர்கள் திருமுன்னிலைக்கு.

தமிழ்த் தொண்டாற்றும் தனிப்பெரும் புலவ.

தமிழ்க்கலை பயிலும் மாணாக்கர் சரசுவதி கடாட்சம் பெறுதல் வேண்டிச் சிறியேன் 'கலைமகளந்தாதி' என்னும் சிறுநூலொன்றை யியற்றி யுள்ளேன். சிலநாட்களின் முன்னர் அதன் பிரதியொன்றைத் தங்கள் திருக்கண் பார்வைக்கும் அனுப்பினேன்.

தமிழகத்தின் குழவியாகிய ஈழநாடு பொலிவளங் குன்றித் தவிக்கின்றதென்பதும் அதனுள்ளும் பெரிதும் வருந்துவது மட்டுக்களப்பென்பதும் தாங்கள் உணர்ந்த விஷயம். அறியாமை நிரம்பிய இவ்விடத் துதித்த எனது நூலின் சிறுமையினையும் தங்கள் பெருமையினையும் பொருட்படுத்தாமற் சிறியேனை உவக்கப் படுத்தும் வண்ணம் ஓர் சிறப்புப் பாயிரம் அருளுவீர்களாக.

யான் பண்டித பூபாலபிள்ளை அவர்களுடைய இளைய சகோதரன் என்பதையும் அன்பாக அறியத் தருகின்றேன்.

இங்ஙனம்
தங்கள் அருள்மொழிக்கே
நோக்கியிருக்கும்
அன்பன்
செ. சீனித்தம்பி

எனது விலாசம்
செ. சீனித்தம்பி
உபாத்தியாயன்
அரசினர்பாடசாலை
மருதமுனை
கல்முனை போஸ்ட்
மட்டக்களப்பு. இலங்கை.

அசல்

15.7.30. செ. சீனித்தம்பி

அசல் – 1 நகல் – 1

Pages 163–165.

த.க. VOL. K'

copied

அசல்

163-165

உ

சிவமயம்

மருதமுனை

15-7-30.

மஹா மஹோபாத்தியாயர்

பிரம்மஸ்ரீ உ. வே. சாமிநாதையர் அவர்கள் திருமுன்னிலைக்கு தமிழ்த் தொண்டாற்றும் தனிப் பெரும்புலவ

தமிழ்க்கலை பயிலும் மாணக்கர் சரசுவதி கடாட்சம் பெறுதல் வேண்டிச் சிறியேன் கலைமகளந்தாதி மென்னும் நூலொன்றை யியற்றியுள்ளேன் சிலநாட்களின் முன்னர் அதன் பிரதியொன்றைத் தங்கள் திருக்கண் பார்வைக்கும் அனுப்பினேன்

தமிழகத்தின் கடைசியாகிய ஈழநாடு மொழிவளங் குன்றித் தவிக்கின்றதென்பதும் அதனுளும் பெரிதும் வருந்துவது மட்டுக்களப்பென்பதும் தாங்கள் நன்கறிந்த விஷயம் அறியாமை நிரம்பிய இவ்விடத்திருந்த எனது நூலின் சிறுமையையும் தங்கள் பெருமையையும் பொருட்படுத்தாமற் சிறியேனை ஊக்கப்படுத்தும் வண்ணம் ஓர் சிறப்புப்பாயிரம் அருளுவீர்களாக.

யான் பண்டித பூபாலபிள்ளை அவர்களுடைய இளைய சகோதரன் என்பதையும் அன்பாக அறியத் தருகின்றேன்

இங்ஙனம்
தங்கள் அருள் மொழித் தேனை
நாநீட்டிச் சுவைக்கும்
அன்பன்
தை. சீனித்தம்பி

செ. சீனித்தம்பி.
உபாத்தியாயன்

அரசினர்ப்பாடசாலை
மருதமுனை
கல்முனை (போஸ்ட்)
மட்டுக்களப்பு இலங்கை.

அசல்

9

15—7—30.

மருதமுனை.

செ. சீனித்தம்பி.

Pages

163-165

தக VOL 'K'

Copied

149